TERM 2

மாதிரி வினாத்தாள் 1 T2

7th Standard

Reg.No. :

**கணிதம்**

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்

Time : 01:30:00 Hrs Total Marks : 50

பகுதி-அ $10 \times 1 = 10$

1) 8 கிலோ அரிசியின் விலை ரூ.160 எனில், 18 கிலோ அரிசியின் விலை

(a) ரூ.480 (b) ரூ.180 (c) ரூ.360 (d) ரூ.1280

2) 7 மாம்பழங்களின் விலை ரூ.35 எனில், 15 மாம்பழங்களின் விலை

(a) ரூ.75 (b) ரூ.25 (c) ரூ.35 (d) ரூ.50

3) ஒரு இரயில் வண்டி 195கிலோமீட்டர் தூரத்தை 3 மணி நேரத்தில் கடக்கின்றது.அதே வேகத்தில், அந்த இரயில் வண்டி 5 மணி நேரத்தில் கடக்கும் தூரம்

(a) 195 கி.மீ. (b) 325 கி.மீ. (c) 390 கி.மீ. (d) 975 கி.மீ.

4) 8 ஆட்கள் ஒரு வேலையை24 நாள்களில் செய்து முடித்தார்கள் எனில், அதே வேலையை 24 ஆட்கள் செய்து முடிக்க எடுத்துக்கொள்ளும் நாள்களின் எண்ணிக்கை

(a) 8 நாள்கள் (b) 16 நாள்கள் (c) 12 நாள்கள் (d) 24 நாள்கள்

5) 18 ஆட்கள் ஒரு வேலையை 20 நாளில் செய்து முடித்தார்கள் எனில், அதே வேலையை 24ஆட்கள் செய்து முடிக்க எடுத்துக்கொள்ளும் நாள்களின் எண்ணிக்கை

(a) 20 நாள்கள் (b) 22 நாள்கள் (c) 21 நாள்கள் (d) 15 நாள்கள்

6) சாய்சதுரத்தின் பரப்பளவு

(a) $d_1 \times d_2$ (b) $3/4(d_1 \times d_2)$ (c) $1/2(d_1 \times d_2)$ (d) $1/4(d_1 \times d_2)$

7) சாய்சதுரத்தின் மூலைவிட்டங்கள் ஒன்றையொன்று எந்த கோணத்தில் இருசமக்கூறிடும்

(a) $30^0$ (b) $45^0$ (c) $60^0$ (d) $90^0$

8) மூலை விட்டங்கள் 10 செ.மீ, 12 செ.மீ கொண்ட ஒரு சாய்சதுரத்தின் பரப்பளவு

(a) 30 செ.மீ$^2$ (b) 60 செ.மீ$^2$ (c) 120 செ.மீ$^2$ (d) 240 செ.மீ$^2$

9) பரப்பளவு 300 செ.மீ $^2$, அடிப்பக்கம் 15 செ.மீ கொண்ட இணைகரத்தின் குத்துயரம்

(a) 10 செ.மீ (b) 15 செ.மீ (c) 20 செ.மீ (d) 30 செ.மீ

10) அடிப்பக்கம் 20 செ.மீ, குத்துயரம் 30 செ.மீ கொண்ட இணைகரத்தின் பரப்பளவு

(a) 300 செ.மீ$^2$ (b) 400 செ.மீ$^2$ (c) 500 செ.மீ$^2$ (d) 600 செ.மீ$^2$

பகுதி-ஆ $8 \times 1 = 8$

11) ஒரே வகையான இரு அளவுகளை வகுத்தல் மூலம் ஒப்பிடுவது __________ ஆகும்

12) ஒப்பிடக் கூடிய இரு அளவுகளை விகிதத்தின்_________ என்பர்

13) விகிதத்தின் முதல் உறுப்பை என்றும்,இரண்டாம் உறுப்பை _________ என்றும் குறிப்பிடலாம்.

14) ஒரே __________ உடைய அளவுகளை விகிதத்தில் ஒப்பிடலாம்

15) விகிதத்திலுள்ள உறுப்புகள் பொதுக் காரணிகளைக் கொண்டிருந்தால் அவற்றிலுள்ள____________ நீக்கிச் சுருக்கலாம்.

16) விகிதத்தின் இரு உறுப்புகளையும் ஒரே எண்ணால் பெருக்கினாலோ (அ) வகுத்தாலோ விகிதம்________ இருக்கும்.அவ்வாறு கிடைக்கும் விகிதங்களை எனக் _________கூறலாம்.

17) விகிதங்களின் சமத்தன்மையை_________எனக் கூறலாம். a,b;c,d ஆகியவை விகிதசமத்தில் இருக்குமானால், a:b::c:d அவற்றை என எழுதலாம்

18) விகிதசமத்தில் ஈற்றெண்களின் பெருக்குத்தொகை =________

பகுதி-இ $2 \times 1 = 2$


19) விகிதத்தில், உறுப்புகளின் வரிசை மிகவும் முக்கியமானது

(a) True (b) False

20) விகிதம் என்பது எண்களால் ஆனது.எனவே அதற்கு அலகுகள் தேவையில்லை


(a) True (b) False

பகுதி-ஈ $9 \times 2 = 18$

21) 


படத்தில் கொடுக்கப்பட்ட அளவுகளுக்கு

AB ஐ அடிப்பக்கமாகக் கொண்டு இணைகரத்தின் பரப்பளவு காண்க

22) 


படத்தில் கொடுக்கப்பட்ட அளவுகளுக்கு
AD ஐ அடிப்பக்கமாகக் கொண்டு இணைகரத்தின் பரப்பளவு காண்க


23) அடிப்பக்கம் 9 செ.மீ, குத்துயரம் 5 செ.மீ உடைய இணைகரம் ஒன்றின் பரப்பளவைக் காண்க.

24) ஓர் இணைகரத்தின் பரப்பளவு 480 செ.மீ $^2$, அடிப்பக்கம் 24 செ.மீ கொண்ட இணைகரத்தின் குத்துயரம் என்ன?


25) சாய் சதுரம் ஒன்றின் பரப்பளவு 150 ச.செ.மீ. அதன் ஒரு மூலைவிட்டம் 20 செ.மீ. மற்றொரு மூலைவிட்டத்தின் அளவைக் காண்க.

26) ஒரு வயலானது சாய்சதுர வடிவில் உள்ளது. வயலின் மூலைவிட்ட அளவுகள் 50மீ, 60மீ. அந்த வயலைச் சமன்செய்ய சதுர மீட்டருக்கு ரூ 2 வீதம் ஆகும் செலவைக் காண்க.

27) ஓர் இணைகரத்தின் பரப்பளவு 56 செ.மீ $^2$ அதன் குத்துயரம் 7 செ.மீ எனில் இணைக்கரத்தின் அடிப்பக்கம் என்ன ?

28) 


PQRS என்ற இணைகரத்தில், இரு பக்கங்களின் நீளங்கள் 9 செ.மீ மற்றும் 5 செ.மீ. அடிப்பக்கம் PQ வைப் பொறுத்து அதன் குத்துயரம் 4 செ.மீ (படத்தைப் பார்க்க) எனில்
இணைகரத்தின் பரப்பளவு யாது?

29) 


PQRS என்ற இணைகரத்தில், இரு பக்கங்களின் நீளங்கள் 9 செ.மீ மற்றும் 5 செ.மீ. அடிப்பக்கம் PQ வைப் பொறுத்து அதன் குத்துயரம் 4 செ.மீ (படத்தைப் பார்க்க) எனில்
அடிப்பக்கம் PS ஐப் பொறுத்து அதன் குத்துயரம் காண்க.

பகுதி-உ $4 \times 3 = 12$

30) கீழ்க்காணும் முக்கோணத்தின் பரப்பளவு மற்றும் உயர அளவுகளைக் கொண்டு அதன் அடிப்பக்கத்தின் நீளத்தைக் காண்க.
பரப்பளவு = 82.5 செ.மீ$^2$ உயரம்=10மீ

31) கீழ்க்காணும் முக்கோணத்தின் பரப்பளவு மற்றும் அடிப்பக்க அளவுகளைக் கொண்டு அதன் உயரம் காண்க
பரப்பளவு =180 மீ$^2$ அடிப்பக்கம்=20மீ

32) கீழ்க்காணும் முக்கோணத்தின் பரப்பளவு மற்றும் அடிப்பக்க அளவுகளைக் கொண்டு அதன் உயரம் காண்க
பரப்பளவு =65.2 மீ$^2$ அடிப்பக்கம்=25மீ

33) கீழ்க்காணும் முக்கோணத்தின் பரப்பளவு மற்றும் அடிப்பக்க அளவுகளைக் கொண்டு அதன் உயரம் காண்க
பரப்பளவு =20செ.மீ$^2$ அடிப்பக்கம்=5செ.மீ

*****************************************

QUESTION BANK 365 https://www.qb365.in